பரிசுத்த ஆவியானவர்
என்னை நடத்துகிறார்

பிதாவே எனக்கு அறிவை உணர்த்த உம்முடைய
நல்ல ஆவியைக் கட்டளையிட்டீர், நன்றி.[1]

பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே
எல்லாவற்றையும் எனக்குப் போதித்து,
இயேசு சொன்ன எல்லாவற்றையும்
எனக்கு நினைப்பூட்டுவார்.[2]

சத்திய ஆவியாகிய அவர்,
சகல சத்தியத்திற்குள்ளும் என்னை நடத்துவார்;
அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல்,
தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி,
வரப்போகிற காரியங்களை எனக்கு அறிவிப்பார்.[3]

உம்முடைய பரிசுத்த ஆவியானவர்
நான் எப்படி ஜெபிக்க வேண்டும் என்று அறிய,
எனக்கு உதவி செய்கிறார்.[4]

உம்முடைய சித்தத்தை செய்ய எனக்குப்
போதித்தருளும் நீரே என் தேவன்; உம்முடைய
நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே
நடத்துவாராக.[5]

நான் தேவனுடைய ஆவியினாலே
நடத்தப்படுகிறபடியால், நான் தேவனுடைய
பிள்ளையாய் இருக்கிறேன்.[6]

இயேசுவின் நாமத்தில், ஆமென்.

[1] நெகெமியா 9:20
[2] யோவான் 14:26
[3] யோவான் 16:13
[4] ரோமர் 8:26,27
[5] சங்கீதம் 143:10
[6] ரோமர் 8:14

நெகேமியா 9:20

அவர்களுக்கு அறிவை உணர்த்த
உம்முடைய நல் ஆவியைக்
கட்டளையிட்டீர்;

யோவான் 14:26

என் நாமத்தினாலே பிதா
அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய
தேற்றரவாளனே எல்லாவற்றையும்
உங்களுக்குப் போதித்து,
நான் உங்களுக்குச் சொன்ன
எல்லாவற்றையும் உங்களுக்கு
நினைப்பூட்டுவார்.

யோவான் 16:13

சத்திய ஆவியாகிய அவர் வரும்போது,
சகல சத்தியத்திற்குள்ளும்
உங்களை நடத்துவார்; அவர்
தம்முடைய சுயமாய்ப் பேசாமல்,
தாம் கேள்விப்பட்டவைகள்
யாவையுஞ்சொல்லி, வரப்போகிற
காரியங்களை உங்களுக்கு
அறிவிப்பார்.

ரோமர் 8:26,27

அந்தப்படியே ஆவியானவரும்
நமது பலவீனங்களில் நமக்கு
உதவிசெய்கிறார். நாம்
ஏற்றபடி வேண்டிக்கொள்ள
வேண்டியதின்னதென்று
அறியாமலிருக்கிறபடியால்,
ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத
பெருமூச்சுகளோடு நமக்காக
வேண்டுதல்செய்கிறார். ஆவியானவர்
தேவனுடைய சித்தத்தின்படியே
பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல்
செய்கிறபடியால், இருதயங்களை
ஆராய்ந்துபார்க்கிறவர் ஆவியின்
சிந்தை இன்னதென்று அறிவார்.

சங்கீதம் 143:10

உமக்குப் பிரியமானதைச் செய்ய
எனக்குப் போதித்தருளும், நீரே என்
தேவன்; உம்முடைய நல்ல ஆவி
என்னைச் செம்மையான வழியிலே
நடத்துவாராக.

ரோமர் 8:14

…எவர்கள் தேவனுடைய ஆவியினாலே
நடத்தப்படுகிறார்களோ, அவர்கள்
தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்.

For more copies of this bookmark please contact a Derek Prince Ministries office below.

DPM-India (English)
admin@derekprince.in
derekprince.com/en-in

DPM-India (Tamil)
admin@derekprince.in
www.derekprince.com/ta

DPM-Asia/Pacific
enquiries@dpm.co.nz
www.derekprince.com/en-nz

DPM-Australia
enquiries@au.derekprince.com
www.derekprince.com.au